# உண்மை நண்பர்கள்

பாடம் 19

எரிகோ எனும் ஊரில் சக்கேயு எனும் செல்வந்தர் ஒருவர் இருந்தார். மக்களிடம் வரி அறவிடுதல் அவரது தொழிலாகும். மக்கள் சக்கேயுவை ஒதுக்கி வாழ்ந்தனர். அவனுக்கு நண்பர்கள் இல்லை. பணமே அவனது நண்பனாக இருந்தது. பணம் இருந்தால் மகிழ்ச்சியுடன் வாழலாம் என அவன் எண்ணினான்.

ஒரு நாள் இயேசு எரிகோவின் வழியாக சென்று கொண்டிருந்தார். இதை அறிந்த சக்கேயுவும் இயேசு யார் என்று பார்க்க விரும்பினார். மக்கள் கூட்டம் அதிகமாயிருந்த படியால் அவனால் பார்க்க முடியவில்லை. சக்கேயு குள்ளனாய் இருந்தான். ஓடிச் சென்று ஒரு முசுக்கட்டை மரத்தில் ஏறிக் கொண்டான். இயேசு அவனைக் கடந்து செல்வார் என ஆவலுடன் எண்ணிக் கொண்டு இருந்தான். ஆனால் இயேசு அவனிருந்த இடத்துக்கு வந்து அண்ணாந்து பார்த்து அவனிடம் ''சக்கேயு, விரைவாய் இறங்கி வாரும். இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்'' என்று கூறினார். அவன் விரைவாய் இறங்கி வந்து நண்பனைப்



போன்று கதைக்கும் இயேசுவை மகிழ்ச்சியோடு வரவேற்றான். இதற்கு முன்னர் அவன் இவ்வாறான நல்ல நண்பனை சந்திக்காதவனாக இருந்தான்.

உண்மையான நண்பன் உடமைகளும் பணமும் அல்ல. இயேசுவே என்பதை புரிந்து கொண்டான்.

“என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். எவர் மீதாவது பொய்க் குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகின்றேன். என எல்லார் முன்னிலையிலும் இயேசுவிடம் பொருத்தனை பண்ணினான். தன் குற்றங்களை உணர்ந்து கொண்டபடியால் அவன் வீட்டிற்கு ஆசீர்வாதம் கிடைத்தது.

## செயற்பாடு

1. மக்கள் சக்கேயுவை ஒதுக்கியமைக்கான காரணம் என்ன?
2. நண்பன் என கருதப்படுபவர் யார்?
3. இயேசுவை எமது நல்ல நண்பராக்குவதற்கு நாம் என்ன செய்ய வேண்டியது என்ன?